**<u>சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை</u>**

**<u>முன்னிலை</u> : திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனி 24–ம் நாள்**

**2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07–ம் நாள் செவ்வாய்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.196/2017</u>**

**<u>C.N.R.No.TNKI11-000495-2017</u>**

G. சரஸ்வதி ... வாதி

// எதிராக //

1. D. கோவிந்தன்
2. G. ரமேஷ்
3. G. ஜானகி
4. R. விமலா
5. K. மாயகண்ணன்
6. வெங்கடாசலம்

....பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சசிக்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், 5, 6–ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N.K. முருகன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்துக்களை நலம் தீது கலந்து அளந்து 5 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு ஒதுக்கி தனி சுவாதினம் செய்து தக்க ஆவணங்கள் செய்து கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும்,

அவ்வாறு பிரதிவாதிகள் வாதிக்கு பாகம் பிரித்துக் கொடுக்காதபட்சத்தில் இந்நீதிமன்றம் நீதிமன்ற ஆணையரை நியமித்து பாகம் பிரித்து வாதிக்கு கொடுக்க இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், தாவா சொத்து பொறுத்து 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014–ம் தேதியில் தாவா சொத்தில் விவசாய வண்டிவழி கிரையப்பத்திரம் ஆவண எண். 1231/2014 என பதிவு செய்து கொடுத்துள்ளது செல்லாது மற்றும் இல்லா நிலையது (Declared as Null and void) என அறிவிக்க வேண்டியும், தாவா சொத்து பொருத்து முறையான பாகம் ஏற்படும் வரையில் பிரதிவாதிகள் யாதொரு ஆவண மாற்றமும் வில்லங்க பாராதீனமும் செய்ய கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டியும், தாவா செலவுத் தொகையினை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்க வேண்டியும் இவ்வழக்கு தாக்கல்.

**<u>2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:</u>**

தாவா சொத்தானது வாதிக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜித சொத்தாகும். தாவா சொத்துக்களுக்கு கூட்டுக் குடும்ப கர்த்தா என்ற முறையில் 1–ம் பிரதிவாதியின் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், "அ" பதிவேடு, கந்தாய தீர்வை பராமரிக்கப்பட்டு வருகிறது. தாவா சொத்துக்களும் இன்னும் சில சொத்துக்களும் இன்றளவும் பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப பிதுராஜ்ஜித சொத்துக்களாகும். வாதிக்கு திருமணமாகி அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார். தாவா சொத்துக்களை 1 முதல் 4 பிரதிவாதிகளுடன் வாதியும் சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்து காலப்பயிர்கள் செய்து அறுவடை முடிந்த பின்பு அவருக்குரிய பங்கினை இன்றளவும் பெற்று வருகின்றார். வாதி அவரது கணவர் வீட்டில் வசித்து வந்தாலும் அவ்வப்போது தாவா சொத்துக்களை வந்து பாதுகாத்து பராமரித்து வருகிறார்கள். இவ்வாறான நிலையில் ஆறு மாதத்திற்கு முன்பு வாதியும், 3, 4 பிரதிவாதிகளும் கூட்டாக பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்களில் 1, 2 பிரதிவாதிகளிடம் தங்களுக்குரிய பங்கினை

பிரித்துக்கொடுக்க பொதுவர்களின் முன்னிலையில் கேட்டதற்கு 1, 2 பிரதிவாதிகள் பாகம் பிரித்து தர மறுத்து விட்டார்கள். வாதியும், 3, 4 பிரதிவாதிகளும் அவர்களது கூட்டுக்குடும்ப சொத்துக்கள் குறித்து ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் தற்போது வில்லங்க சான்று பெற்று பார்த்தனர். அதில் 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014–ம் தேதியில் தாவா சொத்தில் விவசாய வண்டிவழி கிரையப்பத்திரம் ஒன்று வாதிக்கு தெரியாமல் மோசடியாக எழுதி அதனை ஊத்தங்கரை சார்பதிவாளர் ஆவண எண். 1231/2014 என பதிவு செய்து கொடுத்த விவரம் தெரிய வந்தது. அந்த ஆவணத்தில் 2–ம் பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்துள்ள விபரமும் தெரிய வந்தது. வாதிக்கும் 3, 4 பிரதிவாதிகளுக்கும் தெரியாமல் மோசடியாக எழுதிக்கொடுத்துள்ள ஆவணத்தை ரத்து செய்ய வேண்டி கடந்த 29.06.2017–ம் தேதியில் 1, 2, 5, 6 பிரதிவாதிகளுக்கு வாதியும், 3, 4 பிரதிவாதிகளும் வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பும் அனுப்பினார்கள். அந்த சட்ட அறிவிப்பினை பெற்றுக் கொண்ட பின்னர் 5, 6 பிரதிவாதிகள் பொய்யான மற்றும் கற்பனையான சங்கதிகளை முன்வைத்து கடந்த 08.07.2017–ம் தேதியில் பதில் சட்ட அறிவிப்பினை அனுப்பியுள்ளார்கள். பின்னிட்டு 1, 2 பிரதிவாதிகள் வாதிக்கும், 3, 4 பிரதிவாதிகளுக்கும் யாதொரு பாகத்தினையும் பிரித்து தர மறுத்து விட்டார்கள். வாதியும் 3, 4 பிரதிவாதிகளும் சட்ட அறிவிப்பு அனுப்பிய பின்பு 1, 2 பிரதிவாதிகளுடன் 3, 4 பிரதிவாதிகளும் ஒன்றாக சேர்ந்துக் கொண்டு வாதிக்குரிய பாகத்தினை பிரித்துக்கொடுக்காமல் மறுத்து வருவதால் வழக்கின் 3, 4 பிரதிவாதிகள் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். வழக்கின் வாதி இனியும் பிரதிவாதிகளுடன் கூட்டாக விவசாயம் செய்ய இயலாது என்பதால் வாதி தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 1/5 பாகத்தினை பிரித்து பெற வேண்டியும் தனி சுவாதீனம் வேண்டியும், மற்றும் தாவா சொத்தினை பொறுத்து 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014–ம் தேதியில் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ள ஆவண

எண். 1231/2014 சட்டப்படி செல்லாது என அறிவிக்க கோரியும், தாவாவில் இறுதி தீர்வு ஏற்படும்வரை தாவா சொத்து குறித்து பிரதிவாதிகள் யாதொரு வில்லங்க பாராதீனம் செய்யாமலிருக்க நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கு தாக்கல்.

**3. 5, 6 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

வாதியின் தாவா சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும். பிரதிவாதி எதிர்வழக்குரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற அனைத்தையும் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர். 5, 6 பிரதிவாதிகள் நிலங்களுக்கிடையில் 1–ம் பிரதிவாதி கோவிந்தனின் நிலம் இருந்ததால் வண்டி வழி தேவைக்காக 1–ம் பிரதிவாதியை, 5, 6 பிரதிவாதிகள் வண்டி வழி செல்வதற்கு பாதை தேவைப்படுகிறது என்று தங்களுக்கு வண்டி வழிக்கு தேவையான நிலத்தினை கிரையத்திற்கு கேட்டார்கள். அதற்கு 1–ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு கடந்த 07.04.2014–ம் தேதியன்று ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1231/2014 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி 6 சென்ட் நிலம் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அனைத்து வருவாய்துறை ஆவணங்களும் பெற்றிருந்து 5, 6 பிரதிவாதிகளுக்கு 2–ம் பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்து உரிய பிரதிபலனுக்காக கிரையம் செய்து கொடுக்கப்பட்டது. மேற்படி நிலத்தில் விலைக்கு வாங்கியப் பிறகு வண்டி வழிப்பாதை அமைத்து அன்று முதல் 5, 6 பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் 5, 6 பிரதிவாதிகள் தங்கள் நிலத்தில் போர் அமைத்து நீர் பாயித்து விவசாயம் செய்து வந்தார்கள். அதனால் பொறாமைக் கொண்டு 1–ம் பிரதிவாதி வாதியை தூண்டி விட்டு 5, 6 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்ட அறிவிப்பு அனுப்பி இந்த தாவாவை தாக்கல் செய்து அலைக்கழித்து வருகின்றார்கள். மேற்படி வண்டி வழி பாதை விலைக்கு வாங்கும் போது வாதி உட்பட அனைவருக்கும் தெரிந்தே வாங்கப்பட்டது. வாதி மேற்படி வண்டி வழிப்பாதையில் எந்தவிதமான உரிமையும், ஆவணமும் இன்றி

5, 6 பிரதிவாதிகள் நிம்மதியாக விவசாயம் செய்யக்கூடாது என்ற எண்ணத்தில் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 1-ம் பிரதிவாதியின் மீது ஊத்தங்கரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வண்டிவழி பாதை விக்கிரையம் பெற்றதை விளம்புகைப் பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்து அது OS.No. 43/2017 என்று எண்ணிடப்பட்டு விசாரணையில் நிலுவையில் இருந்து வரும் நிலையில் 5, 6 பிரதிவாதிகள் அலைகழிக்க வேண்டும் என்றும், மேற்படி தாவாவில் இருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான காரணங்களுடன் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வாதியின் வழக்கை 5, 6 பிரதிவாதிகளுக்கு ரூ.5,000/- செலவுத் தொகையுடன் மற்றும் சிறப்பு செலவுத் தொகையுடனும் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

4. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 6-ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்மூலம் எவ்வித சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

5. 07.03.2019-ம் தேதி வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் பரிசீலினை செய்து இந்நீதிமன்றத்தால் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

| S.No. | Issues |
|---|---|
| 1. | Whether the suit properties are undivided ancestral joint family properties of the plaintiff and the defendants 1 to 4 as prayed for or not? |
| 2. | Whether the plaintiff is entitled for partition and allotment of 1/5th share in the suit properties by way of preliminary decree as prayed for or not? |
| 3. | Whether the sale deed with regard to the agricultural cart track executed by the 1st defendant in favour of the defendant 5 and 6 in document no. 1231/204, dated: 07.04.2014 is to be declared as null and void or not? |

| | |
|---|---|
| 4. | Whether the Court fee paid by the plaintiff is correct or not? |
| 5. | To what other relief the plaintiff is entitled too? |

6. எழுவினாக்கள் 1, 2–க்கிற்கான தீர்வு

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தாவா சொத்தானது வாதிக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜித சொத்தாகும் என்றும், தாவா சொத்துக்களுக்கு கூட்டுக் குடும்ப கர்த்தா என்ற முறையில் 1–ம் பிரதிவாதியின் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், "அ" பதிவேடு, கந்தாய தீர்வை பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும், தாவா சொத்துக்களும் இன்னும் சில சொத்துக்களும் இன்றளவும் பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப பிதுராஜ்ஜித சொத்துக்களாகும் என்றும், வாதிக்கு திருமணமாகி அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றும், தாவா சொத்துக்களை 1 முதல் 4 பிரதிவாதிகளுடன் வாதியும் சேர்ந்து கூட்டாக அனுபவம் செய்து காலப்பயிர்கள் செய்து அறுவடை முடிந்த பின்பு அவருக்குரிய பங்கினை இன்றளவும் பெற்று வருகின்றார் என்றும், வாதி அவரது கணவர் வீட்டில் வசித்து வந்தாலும் அவ்வப்போது தாவா சொத்துக்களை வந்து பாதுகாத்து பராமரித்து வருகிறார்கள் என்றும், இவ்வாறான நிலையில் ஆறு மாதத்திற்கு முன்பு வாதியும், 3, 4 பிரதிவாதிகளும் கூட்டாக பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்களில் 1, 2 பிரதிவாதிகளிடம் தங்களுக்குரிய பங்கினை பிரித்துக்கொடுக்க பொதுவர்களின் முன்னிலையில் கேட்டதற்கு 1, 2 பிரதிவாதிகள் பாகம் பிரித்து தர மறுத்து விட்டார்கள் என்றும், 1, 2 பிரதிவாதிகள் வாதிக்கும், 3, 4 பிரதிவாதிகளுக்கும் யாதொரு பாகத்தினையும் பிரித்து தர மறுத்து விட்டார்கள் என்றும், வாதியும் 3, 4 பிரதிவாதிகளும் சட்ட அறிவிப்பு அனுப்பிய பின்பு 1, 2 பிரதிவாதிகளுடன் 3, 4 பிரதிவாதிகளும் ஒன்றாக சேர்ந்துக் கொண்டு வாதிக்குரிய பாகத்தினை பிரித்துக்கொடுக்காமல் மறுத்து வருவதால் வழக்கின் 3, 4 பிரதிவாதிகள் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும்

எடுத்துரைத்தார். ஆனால் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 5, 6 பிரதிவாதிகள் நிலங்களுக்கிடையில் 1–ம் பிரதிவாதி கோவிந்தனின் நிலம் இருந்ததால் வண்டி வழி தேவைக்காக 1–ம் பிரதிவாதியை, 5, 6 பிரதிவாதிகள் வண்டி வழி செல்வதற்கு பாதை தேவைப்படுகிறது என்று தங்களுக்கு வண்டி வழிக்கு தேவையான நிலத்தினை கிரையத்திற்கு கேட்டார்கள் என்றும், அதற்கு 1–ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு கடந்த 07.04.2014–ம் தேதியன்று ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1231/2014 ஆக பதிவு செய்யப்பட்டது என்றும், மேற்படி 6 சென்ட் நிலம் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அனைத்து வருவாய்துறை ஆவணங்களும் பெற்றிருந்து 5, 6 பிரதிவாதிகளுக்கு 2–ம் பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்து உரிய பிரதிபலனுக்காக கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி நிலத்தில் விலைக்கு வாங்கியப் பிறகு வண்டி வழிப்பாதை அமைத்து அன்று முதல் 5, 6 பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் 5, 6 பிரதிவாதிகள் தங்கள் நிலத்தில் போர் அமைத்து நீர் பாயித்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றும், மேற்படி வண்டி வழி பாதை விலைக்கு வாங்கும் போது வாதி உட்பட அனைவருக்கும் தெரிந்தே வாங்கப்பட்டது என்றும், வாதி மேற்படி வண்டி வழிப்பாதையில் எந்தவிதமான உரிமையும், ஆவணமும் இன்றி 5, 6 பிரதிவாதிகள் நிம்மதியாக விவசாயம் செய்யக்கூடாது என்ற எண்ணத்தில் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைத்தார்.

மேற்படி சங்கதிகளை பரிசீலிக்கையில் வழக்கு சொத்து பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்ற அடிப்படையில் கூட்டுக்குடும்ப கர்த்தா என்ற முறையில் 1ம் பிரதிவாதி பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளதை பரிசீலிக்கையில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1, சிட்டா 1–ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. மேலும் மேற்படி 1–ம் பிரதிவாதி இவ்வழக்கில் ஒருதலைப்பட்ச படுத்தப்பட்டுள்ளார். வழக்கு சொத்துக்கள் பிதுராஜ்ஜிய சொத்துக்கள் இல்லை என மறுத்துரைப்பதற்கு 1–ம்

பிரதிவாதி மற்றும் அவரது குடும்ப நபர்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது. ஆனால் வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜிய சொத்துக்கள் இல்லை என 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் மேற்படி வா.சா.ஆ.1, சிட்டா 1–ம் பிரதிவாதி பெயரில் உள்ளதாலும், அதேபோல 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்ததாக குறிப்பிடும் வண்டி வழி பாதை கிரைய பத்திரமான வா.சா.ஆ.2–ல் பக்கம் 2–ல் "எனக்கு பட்டா எண். 247–ன் படி பிதுராஜ்ஜியமாக பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்து" என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால் வழக்கு சொத்துக்கள் வாதி குறிப்பிடுவது போல 1–ம் பிரதிவாதி பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் இருந்தாலும் அவை கூட்டுக் குடும்ப கர்த்தா என்ற முறையில் தான் கூட்டுக் குடும்ப சொத்து அவரது பெயரில் உள்ளது என அறிய முடிகிறது. மேலும் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது *"வழக்கு சொத்தில் 5–ல் ஒரு பாகம் வேண்டுமென கேட்டு உள்ளேன். மீதம் உள்ள நான்கு பாகம் யார் யாருக்கு என்றால் எனது சகோதரிகள் இரண்டு பேர், சகோதரர் மற்றும் அப்பா ஆகியோர்களுக்கு ஆகும். வழக்கு சொத்துக்களில் பாகம் கொடுப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றாலும், கிரையம் பெற்ற வண்டி வழிப்பாதை ஆவணத்தை செல்லாது எனக் கோர எனக்கு உரிமை இல்லை"* என சாட்சியம் அளித்துள்ளதால் 5, 6 பிரதிவாதிகளே அவர் கிரையம் பெற்ற சொத்தை தவிர மற்ற சொத்துக்களில் வாதி பாகம் எடுத்துக்கொள்ள ஆட்சேபனை இல்லை என ஒப்புக்கொண்டுள்ளதால் மேற்படி 5, 6 பிரதிவாதிகளே அவர் கிரையம் பெற்ற சொத்தை தவிர மற்ற சொத்துக்களை வாதி மற்றும் 1–ம் பிரதிவாதி குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என்றும், அதில் வாதிக்கு பாகம் உள்ளதையும் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளதால் வழக்கு சொத்தும் வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் கூட்டு குடும்ப சொத்து  என்றே கருத முடிகிறது. வாதியும், 3, 4 பிரதிவாதிகளும் கூட்டாக பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்களில் 1, 2 பிரதிவாதிகளிடம்

தங்களுக்குரிய பங்கினை பிரித்துக்கொடுக்க பொதுவர்களின் முன்னிலையில் கேட்டதற்கு 1, 2 பிரதிவாதிகள் பாகம் பிரித்து தர மறுப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. எனவே வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் கூட்டு குடும்ப பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்பதாலும், வாதி மேற்படி கூட்டு குடும்ப உறுப்பினர் என்பதாலும் வாதிக்கும் வழக்கு சொத்தில் 5–ல் 1 பாக உரிமை உள்ளது தெளிவாக அறிய முடிகிறது. எனவே வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்றும், அதில் வாதிக்கு 1/5 பாகம் உரிமை உள்ளது என எழுவினாக்கள் 1 மற்றும் 2–க்கு தீர்வு காணப்படுகிறது.

7. எழுவினா 3–க்கிற்கான தீர்வு

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வாதியும், 3, 4 பிரதிவாதிகளும் அவர்களது கூட்டுக்குடும்ப சொத்துக்கள் குறித்து ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் தற்போது வில்லங்க சான்று பெற்று பார்த்தனர் என்றும், அதில் 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014–ம் தேதியில் தாவா சொத்தில் விவசாய வண்டிவழி கிரையப்பத்திரம் ஒன்று வாதிக்கு தெரியாமல் மோசடியாக எழுதி அதனை ஊத்தங்கரை சார்பதிவாளர் ஆவண எண். 1231/2014 என பதிவு செய்து கொடுத்த விவரம் தெரிய வந்தது என்றும், அந்த ஆவணத்தில் 2–ம் பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்துள்ள விபரமும் தெரிய வந்தது என்றும், வாதிக்கும் 3, 4 பிரதிவாதிகளுக்கும் தெரியாமல் மோசடியாக எழுதிக்கொடுத்துள்ள ஆவணத்தை ரத்து செய்ய வேண்டியது அவசியம் என எடுத்துரைத்தார். ஆனால் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரையில் 5, 6 பிரதிவாதிகள் நிலங்களுக்கிடையில் 1–ம் பிரதிவாதி கோவிந்தனின் நிலம் இருந்ததால் வண்டி வழி தேவைக்காக 1–ம் பிரதிவாதியை, 5, 6 பிரதிவாதிகள் வண்டி வழி செல்வதற்கு பாதை தேவைப்படுகிறது என்று தங்களுக்கு வண்டி வழிக்கு தேவையான நிலத்தினை கிரையத்திற்கு கேட்டார்கள் என்றும், அதற்கு 1–ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு கடந்த 07.04.2014–ம் தேதியன்று ஊத்தங்கரை

சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1231/2014 ஆக பதிவு செய்யப்பட்டது என்றும், மேற்படி 6 செண்ட் நிலம் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அனைத்து வருவாய்துறை ஆவணங்களும் பெற்றிருந்து 5, 6 பிரதிவாதிகளுக்கு 2–ம் பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்து உரிய பிரதிபலனுக்காக கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி சங்கதிகளை பரிசீலிக்கையில் வழக்கு சொத்துக்கள் வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியமான கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்றும், அதில் வாதிக்கு 1/5 பாகம் உரிமை உள்ளது என எழுவினா 1 மற்றும் 2-ல் தீர்வு காணப்பட்டுள்ளதால் மேற்படி வாதி மற்றும் 3, 4 பிரதிவாதிகள் தரப்பினராக இல்லாமல் 1, 2 பிரதிவாதிகள் மட்டும் தரப்பினராக இருந்து 5, 6 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.2-ன் மூலம் வண்டி வழி பாதை கிரையம் கொடுத்தது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. மேலும் 5, 6 பிரதிவாதிகளே அவர் கிரையம் பெற்ற சொத்தை தவிர மற்ற சொத்துக்களை வாதி மற்றும் 1–ம் பிரதிவாதி குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என்றும், அதில் வாதிக்கு பாகம் உள்ளதையும் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளதால் வழக்கு சொத்தும் வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் கூட்டு குடும்ப சொத்து என தீர்வு காணப்பட்டுள்ளதாலும், வழக்கு சொத்தில் வாதிக்கு 1/5 பாகம் உரிமை உள்ள நிலையில் வாதி மற்றும் 3, 4 பிரதிவாதிகள் சம்மதம் இல்லாமல் வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக் குடும்ப சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ள கிரைய ஆவணம் செல்லக் கூடியது அல்ல என எழுவினா 3-க்கு தீர்வு காணப்படுகிறது.

8. <u>எழுவினாக்கள் 4, 5–க்கிற்கான தீர்வு</u>

5, 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் *"தாவாவில் கொடுத்துள்ள நீதிமன்ற கட்டணம் சரியானதல்ல. தாவா சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை. உரிய கட்டணம் செலுத்தாத காரணத்தின் மூலம் இந்த தாவா தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும்"* என

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படிமதிப்பீடு மற்றும் நீதிமன்ற கட்டணம் எதனடிப்படையில் தவறு என்றும், அதற்கான தெளிவான காரணங்கள் ஏதும் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை. மேலும் இவ்வழக்கில் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை மட்டும் தாக்கல் செய்யப்பட்டு பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக ஆஜராகவில்லை என்பதால் மேற்படி பி.வா.சா.1 முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. மேலும் வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில் வழக்கில் வாதி வழக்கு சொத்துக்களுக்கு மதிப்பீடு செய்து மொத்தம் மதிப்பீட்டில் 1/5 பாகத்திற்கும், இதர பரிகாரங்களும் தெளிவாக கணக்கீடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தி உள்ளதால் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சொத்து மதிப்பு நீதிமன்ற கட்டணம் தவறு என்று குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்றும், இவ்வழக்கு சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள பாகம், விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கக் கூடியது என தீர்வு காணப்பட்டுள்ளதால் இதர பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு கிடைக்கக் கூடியது இல்லை என எழுவினாக்கள் 4, 5–க்கு தீர்வு காணப்படுகிறது.

9. முடிவு:

இறுதியாக இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, வழக்கு சொத்தில் வாதிக்கு 1/5–ல் ஒரு பாகம் கிடைக்கக் கூடியது என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், தாவா சொத்து பொறுத்து 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014–ம் தேதியில் தாவா சொத்தில் விவசாய வண்டிவழி கிரையப்பத்திரம் ஆவண எண். 1231/2014 என பதிவு செய்து கொடுத்துள்ளது செல்லாது (Declared as Null and void) என உத்தரவிட்டும், தாவா சொத்து பொருத்து முறையான பாகம் ஏற்படும் வரையில் பிரதிவாதிகள் யாதொரு ஆவண மாற்றமும் வில்லங்க பாராதீனமும் செய்ய கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பிறப்பித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. உறவுமுறைகளைக் கருத்தில் கொண்டு அவரவர்கள் செலவுத் தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள

வேண்டுமென்றும் தீர்ப்பளித்து உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

**சார்பு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**

**1. வாதி தரப்பு சாட்சி:–**

வா.சா.1 – **G. சரஸ்வதி**

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள்:–**

| **வ.எண்** | **தேதி** | **ஆவண விவரம்** |
|---|---|---|
| வா.சா.ஆ1 | 15.11.2017 | தாவா சொத்து 1–ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கணிணி சிட்டா நகல் |
| வா.சா.ஆ2 | 07.04.2014 | 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு மோசடியாக எழுதி கொடுத்த விவசாய வண்டி வழி கிரையப்பத்திரம் நகல் |
| வா.சா.ஆ3 | 26.09.2017 | வாதி மற்றும் 3, 4 பிரதிவாதிகள் சேர்ந்து 1, 2, 5, 6 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ4 | –– | சட்ட அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (எண்ணிக்கை –4) அசல் |
| வா.சா.ஆ5 | 08.07.2017 | 5, 6 பிரதிவாதிகள் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ6 | 28.07.2017 | தாவா சொத்து தொடர்பான வில்லங்க சான்று நகல் |

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:–**

1. பி.வா.சா.1 – வெங்கடாசலம்

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் :– இல்லை**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

**சார்பு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**